பதிவு எண்: M. 6311 ☆ தொலைபேசி: 51331 ☆ தோற்றம்: 1958 ☆ விலை 7 காசு ☆ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: கார்த்திகை 3 (18-11—72) சனி [illegible]யூர்: கார்த்திகை 4 (19—11—72) ஞாயிறு [இதழ்: 129

சென்னையில் டெலிவிஷன் நிலையக் கட்டடம்

புதுடில்லி, நவ. 18—

"சென்னையில் டெலிவிஷன் நிலையத்துக்கான கட்டடம் கட்டும் பணி, தமிழக அரசின் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; ரு. 37 இலட்சம் செலவில் இக்கட்டடம் [illegible]டப்படுகிறது"

என்று நாட[illegible] மேலவையில் கேள்[illegible]க்குப் பதிலளிக்கை[illegible] செய்தி--ஒலிபரப்புத் துறை துணையமைச்சர் தரம்வீர் சின்கா தெரிவித்தார்.

கழகம் தேர்ந்தெடுத்த பதினைந்தாவது மேயர்

ரு. ஆறுமுகம் மகத்தான வெற்றி

துணை மேயராக சா. கன்னியப்பன் போட்டியின்றித் தேர்வு

எதிரிகளுக்குப் படுதோல்வி -- துரோகிகளுக்கு மூக்குடைப்பு

சென்னை, நவ. 18—

சென்னை மாநகரின் 1972-73 ஆண்டுக்கான மேயராகக் கழகத் தோழர் ரு. ஆறுமுகம் 22 வாக்குகள் கூடுதலாகப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணை மேயராகக் கழகத் தோழரும் -- தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருமான ச. கன்னியப்பன் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிண்டிகேட் கட்சி -- இந்திரா கட்சி -- சுதந்தரா -- வலது கம்யூனிஸ்டு -- எம். ஜி. ஆர். கட்சி ஆகியவைகளின் ஆதரவுடன் போட்டியிட்ட இராசரத்தின நாயக்கர் என்பவர், 52 வாக்குகளே பெற்றுத் தோற்ருர்.

இந்தமுறை மேயர் தேர்தலில் தி. மு. கழகம் வெற்றிபெறப் போவதில்லை என்றும், போறுத்திருந்து பாருங்கள்' என்றும் எதிரிகள், பத்திரிகைகள் வாயிலாகப் பிரச்சாரம் செய்துவந்தது தெரிந்ததே.

பரபரப்புச் செய்திகளைக் கண்டு -- குழம்பியிருந்த மக்களுக்குத் தெளிவான -- திட்டவட்டமான முடிவைத் தந்துவிட்டது மாநகராட்சி மன்றம்.

சென்னை மாநகராட்சி மன்றத்துக்கான புதிய மேயர் தேர்தல் நேற்று மாலை ரிப்பன் கட்டடத்தில் மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமையில் நடைபெற்றது.

கழக வேட்பாளர் ரு. ஆறுமுகத்துக்கு 74 வாக்குகளும், அவரை எதிர்த்தும் போட்டியிட்ட இராசரத்தின நாயக்கருக்கு 52 வாக்குகளும் கிடைத்தன.

புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஆறுமுகம், உடன் மேயர் இருக்கைக்கு அழைத்துவரப்பட்டார்; அவருக்குப் பதவி விலகும் மேயர் திருமதி காமாட்சி செயராமன், மேயர் சங்கிலியை அணிவித்தார்; மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அடுத்தும் புதிய மேயர் தலைமையேற்றுத் துணை மேயர் தேர்தலை நடத்தினுர்.

கழக வேட்பாளரான ச. கன்னியப்பனை எதிர்த்து இந்திரா கட்சியைச் சேர்ந்த பசுபதி தனராசு என்பவர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது; பின்னர், அவர் போட்டியிலிருந்து விலகிக்கொண்டதால் ஒருமனதாகத் தோழர் கன்னியப்பன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய மேயரையும் துணை மேயரையும் பாராட்டி, அனைத்துக் கட்சித் தலைவர்களும், பல உறுப்பினர்களும், மாநகராட்சி ஆணையரும் பேசினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து மேயரும் -- துணை மேயரும் பேசினர்.

மேயர் தேர்தல் முடிவைத் தெரிந்துகொள்வதற்காக ரிப்பன் கட்டடத்தின்முன் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆவலுடன் குழுமியிருந்தனர்; முடிவு அறிவிக்கப்பட்டவுடன், கைதட்டி ஆரவார ஒலியெழுப்பித் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர்.

'அண்ணு புகழ் ஓங்குக -- கலைஞர் வாழ்க -- கழக ஆட்சி வாழ்க' என்று அவர்கள் முழங்கினர்.

மேயர் தேர்தலுக்காக ரிப்பன் கட்டடத்திற்குள் நுழையும் முன்பு கழக மாநகராட்சி உறுப்பினர்கள் அண்ணு சாலையில் உள்ள அண்ணு சிலைக்கும், ரிப்பன் கட்டடத்திற்கு முன்புள்ள சர். பி. தியாகராயர் சிலைக்கும் மாலை அணிவித்தனர்.

மேயர் தேர்தல் முடிந்தபின்,

புதிய மேயரும் -- துணை மேயரும், கலைஞருக்கும்--நாவலருக்கும், மற்ற தலைவர்களுக்கும் மலர் மாலை அணிவித்து வாழ்த்தினைப் பெற்றனர்.

வானொலியின் வக்கிரபுத்தி!

கழக வெற்றிசெய்திக்கு இருட்டடிப்பு ஏன்?

சென்னை, நவ. 18—

சென்னை மேயர் தேர்தல் முடிவு நேற்று மாலை 6-20 மணிக்குச் சென்னை வானொலி நிலையத்திலிருந்து [மாநிலச் செய்தியில்) அறிவிக்கப்பட்டது; ஆனுல், இரவு 7-15 மணிக்கு டில்லியிலிருந்து ஒலிபரப்பான தமிழ்ச் செய்தியில் மேயர் தேர்தல் பற்றிய தகவலே இல்லை.

மாலையில் ஒலிபரப்பாகும் மாநிலச் செய்தியில தரப்படும் தகவல்கள், இரவு 7-15 மணிக்கு டில்லியிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ்ச் செய்தியில் இடம் பெறுவதே இதுவரை வாடிக்கையாக இருந்துவந்தது; ஆனுல், நேற்று வழக்கத்துக்கு மாருக டில்லி வானொலி நிலையம், மேயர் தேர்தல் முடிவை வேண்டுமென்றே இருட்டடிப்புச் செய்துவிட்டது; இன்று காலையில் ஒலிபரப்பான தமிழ்ச் செய்தியில்தான் மேயர் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது.

வானொலி நிலையம் எந்த அளவுக்கு தி.மு.க. எதிர்ப்புப் பிரசார நிறுவன[illegible]க மாறியிருக்கிறது என்பதற்கு, காங்கிரசுக்கும்--கழகத்தை எதிர்ப்பவர்கட்கும் எந்த அளவுக்கும் பிரசாரம் செய்து வருகிறது என்பதற்கும் இது ஒன்றே சான்ருகும்.

15-வது மேயர்

1959-ம் ஆண்டில் முதன்முதல் கழகம் மாநகராட்சியின் பொறுப்பை ஏற்றதிலிருந்து இதுவரையில் 14 மேயர்கள் கழகச் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்; இப்போது பதவியேற்றிருப்பவர் 15-வது மேயர் ஆவார்.

முதல்வர் தந்த 'இனிய செய்தி'

டில்லிக்குப் போன பட்டியல் திரும்பியது

தமிழகமுதல்வருக்கே அனுப்பி வைத்தார் தலைமையமைச்சர்

'படித்தேன்--ரசித்தேன்--புதுமை எதுவும் இல்லை' எனக் கலைஞர் விளக்கம்

சென்னை, நவ. 18—

தி. மு. க. அரசு மீதும் -- அமைச்சர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் அடங்கிய பட்டியலை ஆளுநரிடம் கொடுத்தால் அது முதல்வரிடமே போய்ச் சேரும் என்பதை அறிந்ததும், 'ஆளுநரிடம் கொடுக்கமாட்டோம் -- குடியரசுத் தலைவரிடமே போய்க் கொடுப்போம்' என்று கூறிவிட்டுப் புதுடில்லிக்குப் பறந்தார்கள் -- ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் குழாமும், வலது கம்யூனிஸ்டுக் கல்யாணசுந்தரம் குழாமும்!

குடியரசுத் தலைவரிடம் அவர்கள் கொடுத்த பட்டியல் இப்போது கலைஞரிடமே வந்து சேர்ந்திருக்கிறது!

குடியரசுத் தலைவரிடம் கொடுக்கப்பட்ட பட்டியலைத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி, தமிழக முதலமைச்சர் கலைஞருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தலைமையமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில் எம். ஜி. இராமச்சந்திரனும் -- கல்யாணசுந்தரமும் கொடுத்த புகார்ப் பட்டியலையும் இணைத்து -- அதுபற்றித் தமிழக அரசின் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டிருக்கிருர்.

இத்தகவலை நேற்றிரவு செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், 'ஓர் இனிய செய்தி' என்று குறிப்பிட்டார்--முதல்வர் கலைஞர்.

"என்ன அந்த இனிய செய்தி" என்று செய்தியாளர்கள் கேட்டபோது மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

"புகார்க் கட்டைப் பார்த்தீர்களா?" என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, 'பார்த்தேன் --- படித்தேன் --- ரசித்தேன்' என்று சிரித்துக்கொண்டே முதலமைச்சர் கூறினுர்.

"குறிப்பிடத்தக்கவாறு ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டதற்கு, முதலமைச்சர், 'புதுமை எதுவும் இல்லை' என்று புன்னகையோடு சொன்னுர்.

தப்பிச்சென்ற கைதி

பெரில்லி, நவ. 18—

இங்குள்ள பாகிஸ்தான் போர்க் கைதிகள் முகாமிலிருந்து முகமது முஜாபர் என்ற போர்க் கைதி, முகாமின் இரும்பு வேலியை வெட்டித் தப்பிச் சென்று விட்டார்; அவருடைய இராணுவ உடை அருகிலுள்ள ஒரு வயலில் கிடந்தது.

நல்லவர்கள் தந்த நல்லாதரவு

மேயர் தேர்தல் வெற்றி பற்றி முதலமைச்சர் கலைஞர்

சென்னை, நவ. 18—

"முன்பே கூறியபடி, தாழ்த்தப்பட்ட – பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பணியாற்றக்கூடிய கழகத்திற்கு ஆதரவு காட்ட வேண்டுமென்று நல்லவர்கள் வாக்களித்திருக்கிருர்கள்"

என்று, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மேயர் தேர்தலில் பெற்ற வெற்றி குறித்து நிருபர்களிடம் கருத்தறிவிக்கையில் கூறினுர்.

வெற்றி பெற்ற புதிய மேயர் – துணை மேயரைப் பாராட்டி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:—

"மேயர் தேர்தல் பற்றிப் பொறுத்திருந்து பாருங்கள் – என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்; இன்று கட்டுப்பாட்டு உணர்ச்சியை நாட்டுக்கு உணர்த்தும் வகையில் மாநகராட்சிக் கழக உறுப்பினர்களும், 'தி. மு. கழகத்துடன் கொண்டுள்ள தோழமை தூய்மையானது' என்பதை நிலைநாட்ட மாநகராட்சி முஸ்லிம் லீக் – தமிழரசுக் கழக உறுப்பினர்களும் இந்த வெற்றியைத் தேடித் தந்திருக்கிருர்கள்.

"சமுதாயத்திலுள்ள அடித்தள மக்களுக்குப் பணியாற்றக்கூடிய தி. மு. கழகத்திற்கு இந்த வெற்றியின்மூலம் தங்கள் ஆதரவைக் காட்ட வேண்டுமென்று மாநகராட்சியிலுள்ள வேறு சில நல்ல உறுப்பின[illegible]ளும் வாக்களித்திருப்பதை சென்னை மாநகரிலுள்ள ஏழை – எ[illegible]ய – நடுத்தர மக்கள் சார்பாக நானும், கழகப் பொதுச்செ[illegible]ளாளர் நாவலரும் பாராட்டி வரவேற்கிறோம்.

"புதிய மேய[illegible] நண்பர் ஆறுமுகம் அவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச்[illegible] சேர்ந்தவர்; துணை மேயர் நண்பர் கன்னியப்பன் தாழ்த்தப்பட்[illegible] சமுதாயத்தைச் சேர்ந்தவர்.

"இவர்கள் இருவரும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் சென்னை வளர்ச்சிக்கும் பாடுபடுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேம்."

அர்த்தால் நடத்த எங்களுக்குத்தெரியாதா?

தைரியமிருந்தால் சனநாயக முறையில் சந்திக்கட்டும்

கழக எதிரிகளுக்கு நாவலர் விடுக்கும் அறைகூவல்

சென்னை நவ. 17—

"அர்த்தால் வெ... ...கிறார்கள்; அர்த்தால் என்றால் எந்தக் கடைக்காரன் கடையைத் திறப்பான்; வன்முறையாளர்களால் ரூபாய் நட்டம் ஏற்படுகிறதென்றால் அதனை யார் தருவார்கள்? கடைகளை மூடிவிட்டார்கள் என்றால், அவருடைய கொள்கையைச் சரி என்று ஏற்க முடியதாக அர்த்தமா?

"'அர்த்தால் நடத்தினோம் — ஆட்சியை விட்டுப் போ' என்பது அறிவுடையதுதானா? வாதத்திற்காகச் சொல்லுகிறேன் — இந்த ஆட்சி கவிழ்ந்து வேறு ஆட்சி வந்தால், 15 இலட்சம் தி. மு. கழக உறுப்பினர்கள் தூங்கிக் கொண்டா இருப்பார்கள்? இதை விடப் பெரிய அர்த்தாலை நடத்திக்காட்ட மாட்டார்களா? அப்படி நாங்கள் நடத்தினால் உடனே ஆட்சியை விட்டுப் போய்விடுவார்களா?

"அர்த்தால் வெற்றி — என்கிறார்கள்; துறைமுகத்திலே வேலை நடந்தது; பி. அண்டு சி. ஆலை இயங்கியது; சிம்சன் தொழிலாளர்கள் வேலைக்குப் போனார்கள்; பல தொழிற்சாலைகளில் வேலை நடந்தன; மாநகராட்சி நடந்தது; கார்கள் — பஸ்கள் ஓடின; அரசாங்க அலுவலகங்கள் நடந்தன; இத்தனையும் நடந்தது என்றால், அர்த்தால் வெற்றிக்கு இது அறிகுறியா?

கருத்துக்களைச் சொல்லுங்கள் — உங்கள் பக்கம் மக்களைத் திருப்புங்கள் — மக்கள் ஆதரித்தால் ஆட்சிக்கு வாருங்கள்; இப்படி சனநாயகத்தின் தீர்ப்பைப் பெறுவதை விட்டு விட்டு 'கிளர்ச்சி— அர்த்தால்' என்றால் இதுதான் அண்ணா வழியா?

"தினம் தினம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் இதெல்லாம் எத்தனை நாளைக்கு நிலைக்கும் — நேர்மையும் நாணயமும் உண்மையும்தான் வெல்லும்"

என்று கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை 41-வது வட்டம் தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

வியாசர்பாடியில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு தோழர் இராதாமணாளன் தலைமை தாங்கினார்.

தோழர்கள் வி. தனசேகரன் எம்.சி., கன்னியப்பன் எம்.சி., த. வ. கோவிந்தசாமி, இரா. சிதம்பரம், ஞா. எழிலன், தங்கரத்தினம், வி. தணிகாசலம், பி. ஆ. இலட்சுமிகாந்தன், திருப்பத்தூர் ராமமூர்த்தி, அமைச்சர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்.

இறுதியில் பொதுச் செயலாளர் நாவலர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"9 பேர் மட்டுமே உள்ள எம். ஜி. ஆர். கட்சிக்காரர்களும் வேறு சிலரும், பெரும்பான்மையானவர்கள் கொண்ட தி. மு. க.—முஸ்லிம் லீக் — பார்வர்டு பிளாக் — தமிழரசுக் கழகம் ஆகிய உறுப்பினர்களின் ஆதரவு கொண்ட இந்த அரசாங்கத்தின் மீது 'நம்பிக்கை இல்லை' என்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்?

எம்.ஜி.ஆர். கட்சியில் 9 பேரும் —பொன்னப்ப நாடார் கட்சியில் 13 பேரும் — அனந்தநாயகியின் கட்சியில் 6 பேரும் — கம்யூனிஸ்டுகள் 8 பேரும் சேர்ந்துகொண்டு, 'இந்த அரசு விலக வேண்டும்' என்றால் இப்படி உலகத்தில் எங்கே நடக்கும்?

நான் 39 000 வாக்குகள் வாங்கி வெற்றி பெற்றிருக்கிறேன்; அதேநேரத்தில் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட நண்பர் விஞயகம் 38,000 வாக்குகள் வாங்கினர்.

என்னை ஆதரித்தவர்கள் 39 000 பேர் என்றால், அதேநேரத்தில் எதிர்த்தவர்கள் 38,000 பேர் இருக்கிறார்கள்; அதனாலேயே நான் விலக வேண்டும் என்று கூறிவிட முடியுமா? சனநாயக இலட்சியத்தின் வாதமாகுமா?

இவர்கள் இன்றையத் தினம், 'இலஞ்சம் — ஊழல்' என்று சொல்வதெல்லாம் புதிதல்ல; இவர்களைவிடச் செல்வாக்கும் படைத்த — திறமை மிகுந்த இராஜாஜியும், காமராசரும் 1971-ல் சொன்னதைத்தான் இப்போது புதிதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இராஜாஜி — காமராசர் போன்ற வன்மைமிக்கவர்களெல்லாம், 'ஊழலோ ஊழல்—இலஞ்சமோ இலஞ்சம்' என்று ஊரெல்லாம் பேசிய பிறகுதான் — நாளெல்லாம் பேசிய பிற... ...கழகம் வெற்றி பெற்றது.

45 ஆண்டுக் கால அரசியல் அனுபவம்மிக்க காமராசர் சொல்லித் தோற்றதை — 60 ஆண்டுக்கால அரசியல் அனுபவம்பெற்ற இராஜாஜிசொல்லி வெற்றி பெற முடியாததை இவர்கள் இப்போது சொல்லி வருகிறார்கள்!

தைரியமிருந்தால்—சனநாயகத்தில் நம்பிக்கையிருந்தால், 1976-ல் சந்திக்கட்டுமே!

மக்களின் கருத்தை அறிய ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் வருகிறது; அந்தத் தேர்தலில் சனநாயக முறையில் சந்திக்கத் தைரியமிருந்தால் — துணிவிருந்தால்; முன் வரட்டுமே!

கிளர்ச்சிகளை நடத்துவதன் மூலமே ஆட்சியைக் கீழே இறக்கிவிடுவதென்றால், இந்தியாவில் எந்த ஆட்சியும் நிலைக்காது!

அசாமில் 35 பேர் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கின்றனர்; அத்தனைக்கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன; பல்கலைக் கழகங்கள் மூடியுள்ளன; இரயில் நிலையங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன; இதெல்லாம் நடந்திருப்பதாலேயே அந்த ஆட்சி இராஜினாமா செய்துவிட்டதா?

பெங்களூரில் கலவரம் — குசராத்தில கலவரம் — மகாராட்டிரத்தில் இரத்த ஆறு ஓடுகிறது — பஞ்சாபில் கலவரம் இன்னும் அடங்கவில்லை; ஆகவே, அங்கே ஆட்சியை விட்டுக் கீழே இறங்கிவிட்டார்களா?

காமராசர் ஆட்சியில் முதுகுளத்தூரில் 42 நாள் கலவரம் — இராமநாதபுரமே இரணகளமாக இருந்தது — இரண்டாயிரம் அரிசனக் குடிசைகள் தீப்பிடித்து எரிந்தன — 172 தேவர் வீடுகள் சாம்பலாயின 42 பிணங்கள் விழுந்தன — இராஜினமா செய்தாரா காமராசர்?

நாள்தோறும் 6 மணி நேரம் மின்சாரம் இல்லை

உ. பி.யில் நடவடிக்கை

இலட்சுமணபுரி நவ. 18—

இத் திங்கள் 18-ம் நாளிலிருந்து 30-ம் நாள் வரை உத்தரப் பிரதேசத்திலுள்ள எல்லா நகரங்களிலும் மின்சாரம் சப்ளை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரையில் நிறுத்தப்படும்.

'ரபி' பயிர்களுக்குப் பாசனநீர் கிடைப்பதற்கு உதவுவதற்காக மின்சாரத்தில் சிக்கனம் செய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் மருத்துவ மனைகள் — நீர் நிலைகள் — முக்கிய தொழில்கள் ஆகியவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.

நடக்க இருப்பவை

19--11--72

சிதம்பரம்

5--10-வது வட்ட முத்தமிழ் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு கீழ வீதி தேரடியில்; தலைவர்: எஸ். கண்ணன்; பேசுவோர்: எஸ். தமிழரசி எம்.சி., கேரள சுந்தரம் எம்.சி., பொன். சொக்கலிங்கம் எம்.எல்.ஏ., வி. வி. சாமிநாதன் எம்.பி., கோ. துரைராசன், தி. ம. மணி, இரா. சக்கரவர்த்தி, மரம். நடேசன், புலவர் முத்துத் தமிழரசன், இர. சுப்பிரமணியம், சு. கோவிந்தராசன், இராம. முத்துக்குமரன், துரை. பாலசுப்பிரமணியம், வை. சீனுவாசன், அ. கி. சோமசுந்தரம், இரா. சொக்கலிங்கம், ந. தங்கராசு, க. கலியபெருமாள், ந. இராமச்சந்திரன், பெ. தர்மு, சு. கபீர்தாசு மற்றும் உட்கிளை செயலாளர்கள் — பிரதிநிதிகள் — செயற்குழு உறுப்பினர்கள் — நகராட்சி உறுப்பினர்கள் — கழக முன்னணியினர்.

உள்ளும் புறமும்

ஏமாந்தவரின் புலம்பல்!

'பதவிக்கு வரவேண்டுமே என்று எனக்கு ஆசை இல்லை; நடிகரான நான், நடிப்புத் தொழிலில் இருந்துகொண்டு மந்திரிப் பதவி வகிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்; நடிப்புத் தொழிலைவிடப் போவதில்லை'

—ஓட்டுக் காங்கிரசு மூலவர்

என்ன ஐயா — புதிய குண்டைத் தூக்கிப் போடுகிறீர்! எப்போது உதித்தது இந்த ஞானோதயம்?

1971 தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் வராததுமாக — நேமாளத்துக்குச் சென்றிருந்த நீர், அவசரம் அவசரமாகத் திரும்பியது எதற்காக என்பது தெரியாதா? வருகிற வழியில் டில்லியிலிருந்தபடியே கலைஞருக்கு 'டிரங்-கால்' போட்டு, அமைச்சரவையில் இடம் 'ரிசர்வ்' செய்து வைக்கச் சொன்னதை மறந்துவிட்டீரா?

ஏதோ — சினிமாக் கொட்டகையில் இடம் 'ரிசர்வேஷன்' செய்வதுபோல நினைத்துக் கொண்டு, அமைச்சரவையில் இடம் கேட்டதும் — நீர் சென்னை திரும்பியதும் அமைச்சர் பதவி கொடுக்க இயலாத நிலையை எடுத்துச்சொல்லும்படி முதலமைச்சர் கலைஞர் அமைச்சர் மாதவனை அனுப்பிவைத்ததும் — மாதவனிடம் நீர் சீறி விழுந்ததும் சாதாரண மக்களுக்கு வேண்டுமானால் தெரியாத செய்தியாக இருக்கலாம்; ஆனால் கழகத்தின் முக்கிய தோழர்களுக்கெல்லாம் அது தெரிந்த கதையாயிற்றே!

'நடிப்புத் தொழிலிலும் இருந்து கொண்டு மந்திரிப் பதவி வகிக்க முடியாது' என்ற சட்ட விதியை உமக்கு எடுத்துச் சொன்னவரே சட்ட அமைச்சர் மாதவன்தானே! இப்போது என்னவோ சட்டத்தைக் கரைத்துக் குடித்தவர் போலப் பேசுகிறீரே!

கழுக்கும் ஆசை — மீசைக்கும் ஆசை என்றால் முடியுமா? 'கொழுத்த' வருமானமுள்ள நடிப்புத் தொழிலையும் விட மனமில்லாமல் — மந்திரிப் பதவிக்கும் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருந்தீர்; அது முடியவில்லை!

இவ்வளவு காலம் கழித்து இப்போது சொல்லுகிறீர் — 'மந்திரிப் பதவியில் எனக்கு ஆசை இல்லை' என்று! 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற நரியின் கதைதான் நினைவுக்கு வருகிறது!

'கிட்டாதாயின் வெட்டென மற' என்பது பழமொழி; ஆனால் நீரோ, அதை மறந்தபாடாயில்லை!

அந்தப் பதவி கிடைக்கவில்லை என்பதற்காகத்தானே கழகத்தின்மீதே வீண்பழி சுமத்தி விட்டு வெளியேறத் துணிந்தீர்; பதவி ஆசை இல்லாதவரின் செயலா இது? உமக்குப் பதவி ஆசையே இல்லை என்று உள்ளத்தில் கைவைத்துச் சொல்லும் பார்க்கலாம்!

உமது உள்ளும் புறமும் எப்படிப்பட்டவை என்பதை நன்கு அறிந்தவன் நான் மட்டுமல்ல — என்னைப் போன்றே நாட்டில் பலர் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்!

'நடிப்புத் தொழிலை விடப்போவதில்லை' என்று வேறு, பேசியிருக்கிறீர்; நீர் என்ன விடாதிருப்பது — நடிப்புத் தொழில் உம்மைக் கைவிட்டுத்தான் நாட்கள் பல ஆகிவிட்டனவே!

அந்த ஆசை வேறு இன்னும் உமது நெஞ்சில் ஒட்டிக் கொண்டிருக்கிறதா? பாவம் — பரிதாபம்!

தொழிலுக்குத் தொழிலும்போய் — அரசியலிலும் அனாதையாகப் போகும் உம்மை நினைத்தால் ஒரு பக்கம் சிரிப்பு வந்தாலும், மறுபக்கம் வேதனையாகத்தான் இருக்கிறது!

என்ன இருந்தாலும், இவ்வளவு விரைவாக உமக்கு இந்த நிலை வந்திருக்கக் கூடாது!

— சேனு'

'அசாதாரண' மனிதர் கே. ஏ. மதியழகனுக்கு

'சாதாரண' மனிதன் எழுதும் 'அசாதாரண' கடிதம்

மகா கனம் — மாண்புமிகு மதியழகனார் அவர்கள் திவ்ய சமூகத்துக்கு ஆயிரம்விளக்குத் தொகுதியைச் சேர்ந்த மிக மிகச் சாதாரண மனிதனுகிய சதானந்தம் தண்டனிட்டு எழுதிக்கொண்ட அசாதாரண கடிதம்:—

ஐயன்மீர்,

தங்களைப் போன்ற அசாதாரண மனிதர்களுக்கு என்னைப் போன்ற சர்வ சாதாரண மனிதர்கள் கடிதம் எழுதுவது தகாதுதான்; என்றாலும், 'அசாதாரணமான' இந்த நேரத்தில் நானும் இந்த அசாதாரண கடிதத்தைத் தங்களுக்கு எழுத நேர்ந்ததற்காக மன்னிக்கவும்.

என்னை உமக்குத் தெரியாது; ஏனெனில் நான் சாதாரண மனிதன்தானே; ஆனாலும், உங்களைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மிக நன்றாக அறிந்தவன் என்பது மட்டுமல்ல — உங்கள் ஆயிரம்விளக்குத் தொகுதியின் வாக்காளனும்கூட; கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் இரவு பகலாக உழைத்து — என் சொந்த முயற்சியால் பல நூறு வாக்குகளை உமக்குக் கிடைக்கச் செய்தவன்!

நீர் எப்படி திராவிடர் கழகத்திலும் — அடுத்து தி. மு. கழகத்திலும் முக்கிய இடம் பெற்று நேற்றுவரை பணியாற்றி வந்திருக்கிறீரோ — அதே போல நானும் தொண்டர்கள் மத்தியில் முக்கிய இடம் பெற்று — விளம்பரம் விரும்பாத தொண்டனாகப் பணியாற்றி வந்திருக்கிறேன்.

சட்டப் பேரவையை ஒத்திவைக்கு முன் நீர் சொன்னீரே — 'முப்பதாண்டுகளாக இயக்கத்திலிருந்து பணியாற்றும் அண்ணாவின் தொண்டன் என்ற முறையில் கலைஞருக்கு யோசனை கூறுகிறேன்' என்று — அந்த 'அசாதாரணமான யோசனை' ஒருபுறமிருக்கட்டும்; நானும் உம்மைப் போல அண்ணாவின் தொண்டன்தான்; ஆனால் உம்மைப் போல 'விசுவாசமற்ற' தொண்டன் அல்லன்! அண்ணாவுக்கும் — அண்ணாவின் கொள்கைக்கும் என்னையே அர்ப்பணித்துக் கொண்டுள்ள விசுவாசமான தொண்டன் நான்!

அதனால்தான், உமக்குத் தோன்றிய அந்த 'அசாதாரண' யோசனை எனக்குத் தோன்றவில்லை!

பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட இந்தக் கழகத்தை, ஆட்சிப்பீடத்திலிருந்து ஒரு நொடியில் தூக்கி எறிந்து விடலாம் என்று வகுத்தீரே சதித்திட்டம் — அது சாதாரணமானதா — சந்தேகமில்லாமல், 'அசாதாரணமானது'தான்!

பரம்பரை எதிரிகளுக்கும் ஏற்படாத துணிவு அல்லவா உமக்குப் பிறந்திருக்கிறது!

'இந்த ஆட்சியைக் கவிழ்ப்போம் — கவிழ்ப்போம்' என்று எதிர்க் கட்சியினர்தான் பேசி வந்தனர்; அவர்கள் பேச்சைக் கேட்டு என்போன்ற தொண்டர்களின் நெஞ்சமெல்லாம் பதறுகின்றன இரத்தம் சூடேறுகிறது; என்றாலும், 'எதையும் தாங்கும் இதயத்துடன்' அதையும் தாங்கிக் கொள்கிறோம்!

இப்போது, 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி'யாக மாறியுள்ள புரட்சித் தலைவரும், 'இந்த ஆட்சியை ஒழித்தே தீருவேன்' என்று சங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறார்!

'இந்த ஆட்சி இன்னும் பதவியில் நீடிக்கலாமா?' என்று அவர் — அன்று சட்டமன்றத்தில் கேட்டார் என்பதைக் கேட்டதும் துடித்துப் போனேன்; நீரோ — அவருக்குத் 'ததாஸ்து' கூறியிருக்கிறீர் — அடியெடுத்துக் கொடுத்து முடித்தும் இருக்கிறீர்!

'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பார்களே — உம் உடம்பில் உள்ள தசை மரத்துப் போய்விட்டதா?

இந்த ஆட்சியை அவ்வளவு எளிதில் கவிழ்த்துவிட முடியும் என்ற நம்பிக்கை எதிர்க் கட்சியினருக்குக்கூட இன்னும் வரவில்லையே — உமக்கு எப்படி ஐயா அந்த 'அசாதாரணமான' நம்பிக்கை வந்தது?

'உடனே பதவியை இராஜிநாமா செய்துவிட்டு மீண்டும் மக்களைச் சந்தித்து — அவர்கள் நம்பிக்கையைப் பெற்று வாருங்கள்' என்று கூறினீரே — அது எந்த சனநாயகத் தத்துவத்தில் அடங்கும்?

எதிரிக்குத் துணை போக நீரும் துணிந்துவிட்டீர் என்பதைத் தவிர, இதற்கு வேறு என்ன பொருள்?

பேரறிஞர் அண்ணாவால் அமைக்கப்பட்ட இந்த ஆட்சி, எதிரிகளின் கண்ணைத்தான் உறுத்திக் கொண்டிருந்ததே தவிர, உம்மையும் — உமது புதிய எசமானரையும் என்ன செய்தது? உமக்கு ஏன் இந்தக் கெட்ட எண்ணம்?

'இருந்தால் மந்திரியாகத்தான் இருப்பேன்; இல்லையென்றால், எதிரிகளோடு கூடிக்கொண்டு இந்த மந்திரி சபையையே ஒழிப்பேன்' என்பதுதானே உமது இலட்சியம்? இதைத் தவிர பேரறிஞர் அண்ணாவின் இலட்சியமோ — கொள்கையோ உமக்கு இருக்கிறது என்று உளமாரக் கூற முடியுமா?

"கலைஞரும் — கழக அமைச்சரவையினரும் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர்; உடனே இராஜிநாமா செய்துவிட்டு மறு தேர்தலுக்கு நிற்க வேண்டும்" என்று கூறத் துணிந்த மக்களாட்சித் தத்துவ மேதையே — உம்மை நான் ஒன்று கேட்கிறேன்.

உம்மை அவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து அமர்த்திய 182 சட்டமன்ற உறுப்பினர்கள், 'உம்மீது நம்பிக்கை இல்லை' என்று கூறிவிட்ட பிறகும், நீர் பதவியில் நீடிக்கலாமா?

கலைஞரையோ, கழக அரசையோ தேர்ந்தெடுத்த மக்கள் சொல்லவில்லை — 'இந்த ஆட்சிமீது நம்பிக்கை இல்லை' என்று; மக்கள் அப்படிச் சொல்வதாக நீரும் — உமது புதிய எசமானரும்தான் கூற ஆரம்பித்திருக்கிறீர்கள்!

நாலரைக் கோடி மக்களும் கூடி உங்களிடம் எப்போது இப்படிச் சொன்னார்கள்?

மக்கள் கருத்தை எந்த அளவு கோல் கொண்டு அறிந்து நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்கள் கூட்டத்தில் கூடும் மக்கள் மட்டும்தானா மக்கள்? அப்படியானால் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடங்களுக்கு வந்து பாருங்கள் — அங்கே கூடியிருக்கும் மக்கள் என்ன தீர்ப்பு வழங்குகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்!

தேர்ந்தெடுத்து ஆட்சிக்கு அனுப்பிய மக்கள் சொல்லாத ஒன்றை நீங்கள் சொல்லி, இந்த ஆட்சியை அகற்றிவிடலாம் என்று நினைப்பது மக்களாட்சித் தத்துவத்துக்கு உட்பட்டதுதான் என்றால், உம்மைத் தேர்ந்தெடுத்த சட்டமன்ற உறுப்பினர்கள், 'நம்பிக்கை' இல்லையென்று சொல்லியும் நீர் பதவியிலிருந்து நீங்காமல் ஒட்டிக் கொண்டிருப்பது எந்த மக்களாட்சித் தத்துவத்தின்பாற்பட்டது?

உம்மாலும் இதற்கு விடையளிக்க முடியாது — உமது தலைவராலும் முடியாது.

இந்த அரசியல் மோசடி வேலைகளையெல்லாம் விட்டு விட்டு — ஒழுங்காகப் பதவியிலிருந்து விலகி — நீரும் உமது வாத்தியாரும் வேறு வேலைகளில் ஈடுபடுவது நல்லது என்பதை — உம்மோடு பல நாள் பழகியவன் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உமக்கு ஓட்டுச் சேகரித்துக் கொடுத்துச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தவர்களில் ஒருவன் என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன் — நீர் உடனடியாக அவைத் தலைவர் பதவியை மட்டுமல்லாமல் ஆயிரம் விளக்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜிநாமா செய்துவிடுவதுதான் நேர்மையானது — நியாயமானது — நாணயமான அரசியல்வாதிக்கு அழகானது — செய்வீரா?

இப்படிக்கு
சாதாரண மனிதன்
சதானந்தம்'

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ். ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

நவ. 19 காலை 10-மணி: திருப்பூர்—திருமண நிகழ்ச்சி; 11-மணி; சத்தியமங்கலம்-விவசாயிகள் கருத்தரங்கு; இரவு 7-மணி: சத்தியமங்கலம் — பொதுமக்கள் வரவேற்பு.

கூட்டுறவுத் துறை அமைச்சர்

சி. பா. ஆதித்தனார்

நிகழ்ச்சிகள்

பிப். 20, 21: கல்வி அமைச்சருடன் நெல்லை நிகழ்ச்சிகள்.

பிப். 22 காலை 10 மணி: கோவில்பட்டி நிகழ்ச்சி.

கல்வி — உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

நவ. 19 காலை 10 மணி: கெண்டேபாளையம்; 11 மணி: காரமடை—பொதுமக்கள் வரவேற்பு; பிற்பகல் 12.30 மணி: அன்னூர் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 5-மணி: அன்னூர்—பொதுமக்கள் வரவேற்பு; 6 மணி: சிறுமுகை—பொதுமக்கள் வரவேற்பு; இரவு 7-மணி: கேட்டுப்பாளையம் — பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 20, 21: நெல்லை மாவட்ட நிகழ்ச்சிகள்.

பரிசுச் சீட்டுக் குலுக்கல் முடிவு

முக்கிய திருத்தம்

11-11-72 அன்றைய 'நம் நாடு' இதழில் வெளியான தமிழக அரசு பரிசுச் சீட்டு விளம்பரத்தில், 'ஜே. கியூ.' வரிசை நான்காவது பரிசுகளில், 80367 என்று அச்சாகியிருப்பதை 80366 என்றும்—

அதே வரிசையில் 5 வது பரிசுகளில் 9189 என்று அச்சாகியிருப்பதை 9489 என்றும் திருத்திப் படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிறந்ததையே தெரிந்தெடுப்போம்

அலுவலுக்கு ஒரு தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ...ங்கி அளியுங்கள். தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டின் ...லம் ஒரு லட்ச ரூபாய் பரிசு பெறும் வாய்ப்புகள் அ...கம்.

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

ரூ. 1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.



குலுக்கல் நாள்

11-12-1972

பரிசு சீட்டு ஒன்றின் விலை

ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

தனியார் மின்சார நிலையங்கள்

இந்த ஆண்டு இறுதிக்குள் அரசுடைமையாகும்

அமைச்சர் ஓ. பி. இராமன் அறிவிப்பு

சென்னை, நவ. 15—

"இந்த ஆண்டு முடிவதற்குள் மாநிலத்திலுள்ள எல்லா தனியார் மின்சார நிறுவனங்களையும் அரசே எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்"

என்று, மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன் அ...ர்கள், சட்டமன்ற மேலவையில் அறிவித்தார்.

"மாநிலத்தில் இப்போதைய 25 சதவிகித மின்சார வெ...டு அடுத்த ஜூன் மாதம் வரை நீடிக்கக்கூடும்; மின்சார வெட்...க் கண்டிப்பாக அனுசரித்து அரசுடன் ஒத்துழைக்கும்படி எல்லா மின்சார உபயோகிப்பாளர்களையும் கேட்டுக் கொள்கி...ன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று மேலவையில், மாநில மின்சார வாரிய...தின் 1972-73-ம், ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது விவாத...தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் மேலும் ...றியதாவது:—

"நெய்வேலியில் ஒரு நிலையத்தை எண்ணெயைக் கொ...ண்டு இயக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நெய்வேலித் திட்டத்தின் உற்பத்தித் திறன் 600 மெகாவாட்டாகும்; அது முழு அளவுக்கு வேலை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

நெய்வேலித் திட்டத்தின் உற்பத்தித் திறனில் பாதி அளவுக்குத்தான் கொண்டிருந்தது; சுரங்கத்தில் வெள்ளம் புகுந்ததால் அதன் உற்பத்தி அளவு மேலும் குறைக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்கு மின்சார வசதி அளிக்க முதலிடம் அளிக்கப்படுகிறது.

கிராம மின்சார கார்ப்பரேஷன், 1972-73 ல் ரூ. 2 கோடி அனுமதி அளிக்கக்கூடும்.

தெரு விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்தை மாற்றியமைப்பது மற்றியும், சிமெண்டு—இரசாயனத் தொழில்களு...ான சிறப்புக் கட்டணங்களை ...ற்றி நிர்ணயிப்பது பற்றியும் அ...சாங்கம் பரிசீலித்துக் கொண்...ருக்கிறது.

விவசாயத்தை விடப் ...ரிய தொழில்களுக்கு மின்ச...ரம் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகிறது என்று கூறுவது சரியல்ல.

தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது."

தர்மபுரி மாவட்ட...

தி. மு. க. பிரதிநிதிகள் கூ...சிம்

தர்மபுரி மாவட்ட தி.மு.க. ...ரதிநிதிகள் கூட்டம், 19—11—7... ...ற் ...ால் 11-30 மணிக்கு பாலக்...டு 'கிரீன் லேண்ட்' திரையரங்...ல், அமைச்சர் திரு. க. இராசர... அவர்கள் தலைமையில் நட... பெறும்; பொருள்: மாநாட்... வரவு-செலவுக் கணக்குகள்; கழ... ஆக்கப் பணிகள்; மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் எச். எல். முருகேசன் கேட்டுக் கொள்கிறார். (அழைப்புப் பெற்றவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்)

வானொலியின் தவறான அறிவிப்பு

திருவண்ணாமலை நகர தி. மு. க. செயலாளர் கண்டன அறிக்கை

சென்னை, நவ. 16—

திருவண்ணாமலை நகர தி. மு. க. செயலாளர் கோதண்டம், அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:—

'நேற்று காலையிலிருந்தே திருவண்ணாமலையிலுள்ள எல்லாக் கடைகளும் திறந்திருந்தன; எந்தவிதமான அர்த்தாலும் நடைபெறவில்லை; வழக்கம் போல எல்லாக் காரியங்களும் நடைபெற்றன; பரபரப்போ, அமைதியின்மையோ எங்கும் இல்லை.

இப்படி இருந்தும், நேற்று மாலை வானொலி அறிவிப்பில், திருவண்ணாமலையில் முழு அர்த்தால் நடைபெற்றதாகக் கூறியது; இதுகேட்டு நகர மக்கள் அனைவரும் திடுக்கிட்டனர்; 'வானொலியில் இனி உண்மைச் செய்திகளையே கேட்க முடியாதோ?' என்று ஐயுற்றனர்.

எ...களது வன்மையான கண்ட...த்தை வானொலிக்குத் தெரி...த்துக் கொள்கிறோம்."

குயில் குயில்தான்-- கோட்டான் கோட்டான்தான்

'[illegible]ந்தைகள் அலறி ஆவது என்ன?'-- கலைஞ[illegible] [illegible]ங்கும் சிந்தனை விருந்து

சென்னை, நவ. 1[illegible]

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'குயில் குயில்தான்' என்ற தலைப்பில் 'உடன் பிறப்பு'க்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது :--

உடன் பிறப்பே! எழிலார் சோலை ஒன்று; 'ஏற்ற மிகு மலர்களின் இதழ் விரிப்பு--இயற்கைச் சிரிப்பு' என்றெல்லாம் கவிதை இயற்றலாம்-- அந்தக் காவினைக் கண்டு!

அருவி ஆலோலம் பாடிடும் ஓர்புறம்; தென்றல் நடை பயிலும்--கொடிகளுக்கிடையே; பசும் புல் நுனி வாயால் பனித் துளியின் முத்து நகை புரிகின்ற காட்சியையும் காணலாம்!

சோலை வர்ணனை முடிந்துவிட்டது; இனி அங்கே ஒரு சுந்தரனும்--சுந்தரியும் வந்திடுவர்--சுவைத் தமிழால் காதல் கீதம் பாடுவர்; அதனையும் ரசிக்கலாம் என்றுதானே அடுத்த கட்டத்தை எதிர்பார்க்கிறாய்; இல்லை--இல்லை; நீ அப்படி எதிர்பார்க்க மாட்டாய்; நீ வெறும் ரசிகன் மட்டுமல்லவே--புடம் போட்ட தியாகத் தங்கம் நீ என்பதை உணர்ந்துதானே நான் இதனை எழுதுகிறேன்.

வா--மீண்டும் சோலைக்கே போவோம்; அதோ-- புள்ளினத்தின் கூட்டம் தெரிகிறதா உனக்கு; குளிர் இசை பொழியும் குயிலின் கூட்டம்தான்; அந்தக் குயில்களின் எண்ணிக்கை நேற்று வரையில் நூறு என்று இருந்ததாம்; இன்று அதில் பத்து குறைந்து தொண்ணூறு ஆகி விட்டதாம்.

'என்னம்மா – கவின்மிகு சோலைக்கு அழைத்து வந்தாய்; இப்போது கழித்தல் கணக்குக் காட்டிக் கொண்டிருக்கிறாய்'' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

கணக்குக் கேட்கும் காலம் இது; அதுவும், தன் கணக்கைக் காட்ட ஒப்பாதவர்கள் பிறர் கணக்கைக் காட்டக் கட்டளையிடும் காலம் இது!

அது போகட்டும் – குயிலின் கணக்குக்குப் போவோம்; நேற்று வரையில் தொண்ணூறு குயில்களோடு பத்துக் கோட்டான்களும் சேர்ந்து, தங்களையும் குயில்களென்று கூறிக் கொண்டிருந்தனவாம்; குயில்கள் கூவும்போது கோட்டான்களும் தங்கள் வாயை அசைத்து – தாங்களும் இனியகீதம் இசைப்பதைப்போல நடித்துக் கொண்டிருந்தனவாம்; இந்த வேடதாரிக் கோட்டான்களின் போலித்தனத்தைக் கண்டு குயில்கள் குமுறாமல் இல்லை!

இந்தப் பத்துக் கோட்டான்களைக் குயில் கூட்டத்தில் பார்த்த ஆந்தைகள் எல்லாம் சேர்ந்து, மொத்தமாகவே குயில் கூட்டத்தை 'கோட்டான் கூட்டம்' என்று அழைக்கத் தொடங்கி விட்டனவாம்!

என்ன வேடிக்கை பார்--குயில்களோ எண்ணிக்கையில் தொண்ணூறு; கோட்டான்களோ பத்து; ஆனால், இரண்டையும் சேர்த்து மொத்தமாக, 'கோட்டான் கூட்டம்' என்று பெயர் வைத்து மகிழ்ந்தன -- அந்த 'அழகுமிகு' ஆந்தைகள்!

திடீரென்று குயில்களின் கூட்டத்திலிருந்து கோட்டான்கள் வெளியே பறந்தன; அதோ பார் -- அந்த ஒதிய மரத்துக் கிளையில் அந்தப் பத்துக் கோட்டான்களையும்!

அவைகளின் உண்மைக் குரல் இப்போது ஊருக்குத் தெரிந்துவிட்டது; ஆனால் அந்தக் கோட்டான்கள் தாங்கள்தான் நிஜக் குயில்கள் என்று கத்துகின்றன! அந்தகார இருளில் அவைகளின் கூச்சல் 'பேய்'க் கூச்சலையும் பின்னடையச் செய்யுமே!

அவைகளின் சப்தத்தைக் கேட்ட பிறகும், தங்களைக் குயில்கள் என்றுதான் அழைக்க வேண்டுமென அடம் பிடிக்கின்றன!

ஆந்தைகள் என்ன சொல்லுகின்றன தெரியுமா? -- 'வெளியே வந்துவிட்ட பத்துக் கோட்டான்கள் மட்டும் கோட்டான்கள் அல்ல; சோலை நடுவே கீதம் பாடும் குயில்களும்கூடக் கோட்டான்கள்தான்' என்று ஆந்தைகள் அலறுகின்றன!

குயில்களைக் கோட்டான்கள் என்பதால், அவைகள் கோட்டான்களாகிவிட மாட்டா! என்ன செய்வது? -- அவைகளோடு சேர்ந்து இருந்த குற்றத்திற்காகக் குயில்களுக்கும் அந்தப் பட்டம் கிடைத்துவிட்டது; ஆயினும், ஆந்தைகள் சொல்வதற்காகக் குயில்கள் கோட்டான்களாகிவிட முடியாது!

குயில்கள் குயில்கள்தாம் -- கோட்டான்கள் கோட்டான்கள்தாம் -- ஆந்தைகள் ஆந்தைகள்தாம்!

உடன்பிறப்பே -- இந்தச் சிறு கதை கூறிடத்தானா சோலைக்கு அழைத்தாய் என்று கேட்கிறாயா? இல்லை என் அன்பே -- சிறு கதை கூற அல்ல -- உன் சிந்தைக்கு வேலை தர!

எம். ஜி. இராமச்சந்திரன் மீது மானநட்ட வழக்கு

குமாரபாளையம் அங்கப்பன் சார்பில் தாக்கல்

சேலம், நவ. 18—

எம். ஜி. இராமச்சந்திரன் மீது குமாரபாளையம் அங்கப்பன் மானநட்ட வழக்கு தொடுத்திருக்கிறார்.

இந்த வழக்கு சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குமாரபாளையம் வியாபாரி ஒருவர், அரசுக்கு ரூ. 7 இலட்சம் விற்பனை வரி பாக்கி; இவரைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் குறிப்பு கொடுத்திருந்தும், தி.மு.க. அமைச்சர்கள் அவர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை; சட்டப்படி இத்தனை ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் காலாவதியாகிவிடும் என்று சட்ட விதியைப் பயன்படுத்தி அவர் தப்பிக்க வழி செய்துவிட்டு, தி.மு. கழகத்தில் சேர்த்துக் கொண்டார்கள்.''

தம்மைப்பற்றி 23–10–72 அன்று இவ்வாறு பத்திரிகைகளிடம் தெரிவித்து இதனைப் பிரமாதமாக வெளியிடும்படியும் எம். ஜி. இராமச்சந்திரன் தூண்டியிருக்கிறார்; இந்த உண்மைக்கும் புறம்பான அவதூறை 'நாத்திகம்' -- 'அலை ஓசை' 'சுதேசமித்திரன்' -- 'தினமலர்' ஆகிய ஏடுகள் அளவுக்கு அதிகமாக விளம்பரப்படுத்தின.

மனுதாரர் அங்கப்ப செட்டியார், வாழ்க்கையில் மிக உயர்வான நிலையில் உள்ள குமாரபாளையத்து வர்த்தகர்; அவ்வூர் நகர பஞ்சாயத்தின் தலைவர்; பள்ளிப்பாளையம் பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவர் ஆலை உரிமையாளர்; மக்களால் பெரிதும் மதிக்கப்படுவர்; தி. மு கழகத்தைச் சேர்ந்தவர்.

எம். ஜி. இராமச்சந்திரன் நிறுவனராகக் கொண்ட கட்சியில் அவரைச் சேர்த்துக்கொள்வதற்கு நடைபெற்ற முயற்சிகள் பயனளிக்கவில்லை; இதனால் வருத்தமடைந்த எம். ஜி. இராமச்சந்திரன், மேற்கண்டவாறு உண்மைக்கும் புறம்பான அவதூறினைதைச் சொல்லியிருக்கிறார்.

மக்களிடத்தில் அங்கப்ப செட்டியார் மீது வெறுப்பு வளரக் குரோதத்தோடு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டு இது.

இராமச்சந்திரன் கூறியுள்ள விவரங்கள் உண்மைக்கும் புறம்பானவை.''

உண்மைக்குப் புறம்பான செய்தி

வெளியிட்டதற்காக வருத்தம் தெரிவித்தது 'நாத்திகம்' ஏடு

கடந்த அக். 25 ஆம் தேதி 'நாத்திகம்' இதழில், குமாரபாளையம் தி. மு. க. பிரமுகர் ஜெ. கே. கே. அங்கப்பன் அவர்களைப் பற்றி அவதூறாக ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அதனை எதிர்த்து, அங்கப்பனின் வழக்கறிஞர் 'நாத்திகம்' ஆசிரியருக்கு நோட்டீசு அனுப்பியிருந்தார்.

அதையொட்டி, 'நாத்திகம்' ஆசிரியர் மன்னிப்புக்கோரி அங்கப்பனின் வழக்கறிஞருக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்திலுள்ளபடி, 9—11—72 அன்றைய 'நாத்திகம்' இதழில், 'வருந்துகிறோம்' என்ற தலைப்பில் மன்னிப்புக் கோரும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது; அது வருமாறு:—

''நாத்திகம்' 25—10—72-ந் தேதி இதழில் திரு. எஸ். ஏ. முருகானந்தம் எம்.பி. அனுப்பியிருந்த அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

''அந்த அறிக்கையில், குமாரபாளையம் ஜெ. கே. கே. அங்கப்ப செட்டியார் பற்றி கூறப்பட்டிருந்த செய்திகள் அனைத்தும் உண்மைக்கும் புறம்பானது என்று அவர் சார்பில் அறிவிக்கப்படுகிறது; எனவே அந்த அறிக்கையை வெளியிட்டதற்காக வருந்துகிறோம்.''

புதிய மேயர் வாழ்க்கைக் குறிப்பு

புதிய மேயர் ரு. ஆறுமுகம், சென்னை 25-வது வட்டத்திலிருந்து மாநகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; அதற்கு முன்பு 26-வது வட்ட மாநகராட்சி உறுப்பினராக இருந்தவர்.

41 வயதான அவர், நீதிக் கட்சிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; கழகத் துவக்கக்காலம் முதல் கழகத்தில் நீங்காப் பற்றுடன் இருந்து பணியாற்றி வருபவர் ஆவார்.

கழகம் நடத்திய அறப் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றிருக்கிறார்.

பேசின்-பிரிட்ஜ் பகுதி தி. மு. க. செயலாளராகவும் இருந்துவருகிறார்.

எஸ் எஸ்.எல்.சி. வரை படித்தவர்! சைக்கிள் உதிரி உறுப்புக் கடை நடத்தி வருகிறார்.

இவருடைய தந்தையார் திரு. ருக்குமாங்கத நாயக்கர் பழைய நீதிக் கட்சிப் பிரமுகர்களில் ஒருவராவார்.

துணை மேயர்

துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சா. கன்னியப்பன், சென்னை 67-வது வட்டத்திலிருந்து (பெரியமேடு அம்பேத்கார் நகர்) தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார்.

இவர் 1964-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மாநகராட்சி உறுப்பினராக இருந்து வருகிறார்.

இவர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுயமரியாதைக் குடும்பத்தில் பிறந்த இவருக்கு வயது நாற்பத்திரண்டு.

கழகத் துவக்கநாள் முதல் சிறந்த செயல்வீரராக இருந்துவரும் இவர், பல ஆண்டுகள் கிளைக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றிருக்கிறார்.

ஆந்திரத்தில் கிளர்ச்சி-- இரயில்கள் ரத்து

சென்னை, நவ. 18—

ஆந்திரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு அரசாங்க வேலை வாய்ப்புப் பணிகளைத் தரவேண்டும் என்ற சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து வருபவர்கள், இரயில்களைத் தடுத்து நிறுத்துவதால், ஆந்திரம் வழியாகச் செல்லும் பல இரயில்கள் ஏற்கனவே ரத்து செய்யப்பட்டிருக்கின்றன; அவை வருமாறு :—

சென்னையிலிருந்து திங்கட்கிழமை தோறும் புறப்படும் சென்னை -- டெல்லி எக்ஸ்பிரஸ்.

டெல்லியிலிருந்து புதன் கிழமை தோறும் புறப்படும் டெல்லி -- சென்னை எக்ஸ்பிரஸ்.

ஆயினும், சென்னையிலிருந்து சனிக்கிழமைதோறும் புறப்படும் சென்னை -- டெல்லி எக்ஸ்பிரசும், டெல்லியிலிருந்து திங்கட் கிழமை தோறும் புறப்படும் டெல்லி -- சென்னை எக்ஸ்பிரசும் வழக்கம் போல் ஓடும்.

இரயில் நிலையத்தை மாணவர்கள் கைப்பற்றினர்

ஆர்ப்பாட்டக்காரர்கள் இரயில் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்துவதில் முனைந்திருக்கின்றனர்; நேற்று மாலை 3-மணி வரையில் 11-தடவைகள் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன; 8 இரயில் வண்டிகள் இதனால் பாதிக்கப்பட்டன.

நேற்று 300 மாணவர்கள் குண்டூர் இரயில் நிலையத்திற்குள் நுழைந்து துணை ஸ்டேஷன்--மாஸ்டரை அவரது அறையிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றி-- அவரது அறையைப் பூட்டிவிட்டனர்.

பின்னர், டிக்கெட் வழங்கும் ஊழியர்களையும் அவர்களது அறைகளிலிருந்து வெளியேற்றினர்; தொலைபேசித் தொடர்புகளைத் துண்டித்தனர்.

இரயில்வே போலீஸ் படையினர் அங்கு விரைந்து சென்றனர்.

40 பஸ்கள் சேதமடைந்தன

மாணவர்கள் போராட்டத்தினால் கடந்த சில நாட்களில் 40 பஸ்கள் சேதமடைந்தன.

சிதம்பரம்வட்ட.தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

சிதம்பரம் வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம், 1[illegible]—11—72 மாலை 3-மணியளவில், தெற்கு சன்னதி நாடார் திருமணக் கட்டடத்தில், இரா. க. சீனுவாசன் தலைமையில் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்களும் -- பிரதிநிதிகளும் -- பொது உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் தி. ப. மணி கேட்டுக்கொள்கிறார்.

ஒட்டுக் காங்கிரசுத் தலைவரின் விஷமப் பிரசாரம்

மாணவர்களைத் தூண்டி விடும் வகையில் அவதூறு

சட்டப்படி நடவடிக்கை -- அமைச்சர் செ. மாதவன் அறிவிப்பு

சென்னை, நவ. 17—

சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், ஒட்டுக் காங்கிரசுத் தலைவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார்; அறிக்கை வருமாறு :—

''இன்று மாலைப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்தியில், 'விருத்தாசலம் சிறையிலும் -- மற்றும் பல்வேறு சிறைகளிலும் கைதிகளாக இருக்கும் மாணவர்களையும், தமது (எம்.ஜி.ஆர்.) கட்சியைச் சேர்ந்தவர்களையும் சிறுநீரையும் -- மலத்தையும் உண்ணச் செய்தும், செருப்பை வாயில் வைக்கச் செய்தும் அடித்துக் கொடுமைப்படுத்துவதாக எம். ஜி. ஆர். கூறியிருக்கிறார்; இதைப் பற்றி உடனே விசாரித்தேன்; இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யாகும்.

''இவ்வளவு அவதூறாகவும் -- விஷமத்தனமாகவும் புகார்களை வெளியிடுவது மாணவர்களுக்கும் -- பொதுமக்களுக்கும் ஆத்திரமூட்டுவதாகவும், அவர்களைத் தூண்டிவிடக்கூடியதாகவும் உள்ளது.

''இப்படிப் பொய்யாகச் செய்திகளை வெளியிடுவது கண்டிக்கத்தக்கது.

''இதற்காகச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும்; அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (84, [illegible]) [illegible] இது வெளியிடப்படுகிறது.